பேரூராட்சிகளின் இயக்குநர் சென்னை–28, அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை:– திரு.கிரண் குராலா, இ.ஆ.ப.,

ந.க.எண். 16610/2021/அ6

நாள்: 20.09.2023

பொருள் : பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – திருநெல்வேலி மண்டலம் – தென்காசி மாவட்டம் – சிவகிரி பேரூராட்சி அலுவலக உதவியாளர் மணி (திரு).வே – 12.07.2012 அன்று பணியிடைக் காலமானார் – அன்னாரது வாரிசுதாரர் மற்றும் மகன் காளிதாஸ் (திரு).வே.ம – என்பவருக்கு வீரவநல்லூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது – 21.01.2019 முற்பகல் முதல் பணியில் சேர்ந்தது – பணிவரன்முறை செய்தல் – ஆணையிடப்படுகிறது

பார்வை :
1. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.4384/2017/ப2, நாள்.09.01.2019
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)துறை, நாள். 23.01.2020
3. அரசாணை (நிலை)எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)துறை, நாள். 26.02.2021
4. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் கடிதம் ந.க.எண்.4384/2017/ப2, நாள். 07.12.2021 மற்றும் 08.08.2023

******

ஆணை:–

திருநெல்வேலி மண்டலம் தென்காசி மாவட்டம் சிவகிரி பேரூராட்சியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு.வே.மணி என்பவர் 12.07.2012 அன்று பணியிடைக் காலமானதை தொடர்ந்து அன்னாரது வாரிசுதாரரும் மகனுமான திரு.வே.ம.காளிதாஸ் என்பவருக்கு கருணை அடிப்படையில் பார்வை 1–ல் காணும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4384/2017/ப2, நாள்.09.01.2019–ன்படி கருணை அடிப்படையில் வீரவநல்லூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு 21.01.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் இணைந்து பணிபுரிந்து வருகிறார்.

அதனை தொடர்ந்து கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்ற திரு.வே.ம.காளிதாஸ் என்பவரது பணியினை வரன்முறை செய்யக் கேட்டு பார்வை 4–ல் காணும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து பரிந்துரை செய்து கடிதம் வரப்பெற்றுள்ளது. அதனடிப்படையில் இந்நேர்வில் பரிசீலிக்கப்பட்டதில் பார்வை 3–ல் காணும் அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021–ல் வெளியிடப்பட்ட வழிமுறைகளின்படி நியமன அலுவலருக்கு ஒரு நிலை கூடுதல்

அதிகாரம் பெற்ற பேரூராட்சிகளின் இயக்குநர் நிலையிலேயே இந்நேர்வில் பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் திருநெல்வேலி மாவட்டம் வீரவநல்லூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.வே.ம.காளிதாஸ் என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்க்காணும் விவரப்படி பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் / பதவி | பணிபுரியும் பேரூராட்சி | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்த நாள் |
|---|---|---|---|---|
| 1. | திரு.வே.ம.காளிதாஸ் இளநிலை உதவியாளர் | வீரவநல்லூர் பேரூராட்சி | 21.01.2019 மு.ப | 21.01.2019 மு.ப |

மேலும் இப்பொருள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகளை மேற்கொள்ளவும் மற்றும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான பணிப்பதிவேட்டின் நகலினை இவ்வியக்ககத்திற்கு அனுப்பிடவும் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

21/9
இயக்குநர் (1/4)

20/09/2023

பெறுநர்:-

திரு.வே.ம.காளிதாஸ்
இளநிலை உதவியாளர்
வீரவநல்லூர் பேரூராட்சி
திருநெல்வேலி மாவட்டம்.
(திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் வாயிலாக)

நகல்:-

1. மாவட்ட ஆட்சித்தலைவர், திருநெல்வேலி மாவட்டம்
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம்
3. செயல் அலுவலர், வீரவநல்லூர் பேரூராட்சி
4. அ6 இருப்பு கோப்பு
5 அ2 இருக்கை(தொடர் நடவடிக்கைக்கு)